2003 ஏப்ரல் 21]

குழுக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவும் அவர்களுக்குத் துணைபுரிவதற்காகவும்தான் அந்தந்தப் பகுதியிலே இருக்கிற தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகிறார்களே தவிர, தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டிலே சுய உதவிக் குழுக்கள் இயங்கவில்லை. அதேபோல சத்துணவுக் கூடங்கள், ஊட்டச் சத்து மையங்களிலே கூட்டம் நடத்துவதற்கு, பள்ளிக் குழந்தைகள் படித்து முடித்துவிட்டுச் சென்றதற்குப் பிறகுதான் அந்த மையங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு அந்தக் குழு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. கூட்டம் முடிந்ததற்குப் பிறகு சத்துணவுப் பொறுப்பாளர்களிடத்திலோ அல்லது ஊட்டச் சத்து மையங்களின் பொறுப்பாளர்களின் கையிலோ அந்தக் கட்டடத்தின் பொறுப்பு வந்துவிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 273, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

273—

கண்காணிப்புக் குழு

***10072—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களைக் கண்காணிக்க பொதுமக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சத்துணவு மையங்களைக் கண்காணிக்க பொதுமக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், பொதுமக்கள் அடங்கிய குழு நியமிக்கப்படவில்லை

என்று கூறினார்கள். வேறு எந்த மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அரசாணை எண் 66, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13-05-2002-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில், மையங்களைக் கவனிக்க மாவட்ட வட்டார, மாநகராட்சி, நகராட்சி அளவில் உள்ள குழுக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் இடம் பெற்றுள்ளார்கள். இது தவிர, அந்தந்த கிராமங்களிலே உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களும், பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களினுடைய பிரதிநிதிகளும், அரசுசாரா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் பணிகள் என்னென்ன என்பதையும் இதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலே பயன்பெறுகின்ற பயனாளிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு சரியான அளவிலே காய்கறி மற்றும் உணவுப் பொருட்கள் எடுக்கப்படுகிறதா அல்லது தரமான உணவைப் படைக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கும் — — கண்காணிப்புக் குழு ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல -- அந்தந்த கிராமங்களிலே நடைபெறுகின்ற சத்துணவு மையங்களில் பொது மக்கள் இது சம்பந்தமாக ஏதாவது குறைகளை எடுத்துச்சொல்கிற பொழுது அதைக் கேட்பதற்கும் இந்தக் கண்காணிப்புக் குழுவிற்கு சில விதிகளை வகுத்து அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி க. பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்களில், சத்துணவு ஊழியர்கள் அமருவதற்கான நாற்காலி அல்லது சத்துணவு மையங்களில்

2003 ஏப்ரல் 21]

பணியாற்றக்கூடிய பெண் ஊழியர்கள் ஒதுங்குவதற்கான கழிவறைகள் போன்ற வசதிகளெல்லாம் காணப்படவில்லை. ஆகவே அந்த ஊழியர்களுடைய நலனை முன்னிட்டு, அவர்களுக்கான இருப்பிட வசதிகளை உத்தரவாதப்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு அரசினுடைய குறிப்பில், எதிர்காலத்திலே திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அடுத்ததாக, அந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கான குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமையைக் கருத்திலேகொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் ஆயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 274, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

274—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***15893—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், டோல்கேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை முசிறிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர்